**இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் - 2021**

-------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் (“கூட்டுத்தாபனம்”) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், முக்கியமான கணக்கீட்டுக்கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்ப டும் தாக்கங்களை தவிர்த்து, கூட்டுத்தாபனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான

காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்று க்காக நியாயமான உறுதிப்ப ாடொன்றை பெற்று கொள்ள போதியளவான ''சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டு ப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால்நடாத்திச் செல்லப்படல் அவசியமாகும்.

### 1.5.2. இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமத்தின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 | | |
| | நியமத்தின் 54 ஆம் பந்திக்கு அமைய நிறுவனத்தின் நிதிநிலைமைக் கூற்றில் உரிமையாண்மை மற்றும் ஒதுக்கங்களின் கீழ் உரிமையாண்மை தொடர்பான உருப்படிகள் மாத்திரம் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தினால் பதவியணி உத்தியோகத்தர்களின் அங்கத்துவப் பணத்தினை கொண்ட ரூபா. 95.14 மில்லியன் ஊழியர் நலன்புரி நிதிய மீதியை உரிமையாண்மை மற்றும் ஒதுக்கங்களின் கீழும் மற்றும் நடைமுறை அல்லாத பொறுப்புகளின் கீழும் அடையாளம் காணப்பட்டிருந்தது. அதன் காரணமாக உரிமையாண்மை மற்றும் ஒதுக்கங்கள் அந்த பெறுமதியில் மிகைக் கணிப்பீட்டுக்கு உள்ளாக்கப்பட்டு இருந்ததுடன் நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த நிதியம் நடைமுறை அல்லாத பொறுப்புகளின் கீழ் காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய மூலதனத்தின் கீழ் உரிமையாண்மை மற்றும் ஒதுக்கங்கள் மட்டும் நிதிக்கூற்றுகளில் காட்டப்படுதல் வேண்டும் என்பது. |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07 | | |
| | காசுப்பாய்ச்சல் கூற்றினை நேரில் முறைமையில் தயாரிக்கும் போது, செயற்பாட்டு மூலதன மாற்றத்தை சீராக்குவதற்கு பயன்படுத்தப்பட வேண்டியது நடைமுறை சொத்துக்கள் மற்றும் நடைமுறை பொறுப்புக்களாக உள்ள போதிலும், கூட்டுத்தாபனத்தினால் உரிமையாண்மை மற்றும் ஒதுக்கங்களின் கீழ் உள்ள ஊழியர் நலன்புரி நிதியத்தின் வேறுபாடும் அதில் சீராக்கப்பட்ட காரணத்தால் செயற்பாட்டு | மேலே ''அ'' உடன் தொடர்புடைய ஊழியர் நலன்புரி நிதியம் நடைமுறை அல்லாத பொறுப்புகளின் கீழ் வகைப்படுத்தப்படும் போது இது திருத்தப்படும். | ஊழியர் நலன்புரி நிதியத்தின் தன்மை மற்றும் விடயப் பரப்பிற்கு அமைய கணக்கிடுதல் திருத்தப்படுதல் வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| | மூலதனத்திலான வேறுபாடு ரூபா. 13.63 மில்லியன் மிகை கணக்கீடு செய்யப்பட்டு நிதி செயல்பாடுகள் அந்தப் பெறுமதியினால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 | | |
| (i) | நியமத்தின 34 ஆம் பிரிவிற்கு அமைய, நியாயமான பெறுமதியில் கருதப்பட வேண்டிய மாற்றங்கள் ஏற்படக்கூடிய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பன வருடம் தோறும் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன், நியாயமான பெறுமதியில் கருதப்பட வேண்டிய மாற்றம் அடையாத சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் 03 வருடங்கள் அல்லது 05 வருடங்களுள் மீள் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். எனினும் கூட்டுத்தாபனத்தினால் ரூபா. 1,935.79 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுள் அடங்கியுள்ள ரூபா. 971.26 மில்லியன் பெறுமதியான காணி மற்றும் கட்டடங்களின் பெறுமதி ஆரம்ப கிரயத்தில் நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்ததுடன் எச் சந்தர்ப்பத்திலும் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணிகள் 2023 ஆம் ஆண்டில் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் ஊடாக மதிப்பீடு செய்யப்பட்டு அதன் தற்கால பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நியமங்களுக்கு அமைய கூட்டத்தாபனத்திற்கு சொந்தமான சொத்துக்களின் நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுகளில் காட்டப்படுதல் வேண்டும் என்பது. |
| (ii) | நியமத்தின் 36 ஆம் பிரிவிற்கு அமைய, ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கு உரிய ஏதேனும் உருப்படி ஒன்று மீள் மதிப்பீடு செய்யப்படுமாயின், அந்த உருப்படிக்கு உரிய சொத்து வகுப்பினையும் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், ரூபா. 301.39 மில்லியன் பெறுமதியான வாகனங்கள் மாத்திரம் 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாக இருந்த 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்த கிரயம் முறையே ரூபா. 24.74 மில்லியன் மற்றும் ரூபா. 26.47 மில்லியன் மற்றும் கொண்டு செல்லும் பெறுமதி பூஜ்ஜியமான 160 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஒரு ஜீப் வண்டி என்பன மீளாய்வாண்டில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகின்றேன். 2023 ஆம் ஆண்டு தொடக்கம் தனியான சொத்து வகுப்பாக நிதிக்கூற்றுகளில் காட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் சொத்து மீள் மதிப்பீட்டின் போது குறித்த சொத்து வகுப்பினையும் மீள் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | நியமத்தின் 37 ஆம் பிரிவிற்கு அமைய நிறுவனத்தின் செயல்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் ஒரே மாதிரியான அம்சங்களை கொண்ட சொத்துக்களின் தொகுதி ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் எனும் வகுப்பாக வகைப்படுத்தப்படல் வேண்டும். எவ்வாறு இருப்பினும், கூட்டுத்தாபனத்தினால் 2021 திசெம்பர 31 ஆம் திகதியில் ரூபா.2.95 மில்லியன் பெறுமதியான தளபாடங்கள், ரூபா.2.39 மில்லியன் பெறுமதியான அலுவலக உபகரணங்கள், ரூபா. 0.64 மில்லியன் பெறுமதியான நலன்புரி உபகரணங்கள் உள்ளிட்ட ரூபா.10.53 மில்லியன் கிரயமான நிலையான சொத்துத் இருப்பொன்று வேறு நிலையான சொத்துக்களாக வகைப்படுத்தப்படாது ஏடுகளில் காட்டப்பட்டிருந்தது. | தெளிவான சொத்து வகுப்பு ஒன்றில் உள்ளடக்கப்பட முடியாததால் அவ்வாறு ஒப்பீட்டளவில் வேறு வேறு சொத்து வகுப்புக்களாக சமர்ப்பிப்பதில் பயனற்ற சொத்துக்கள் வேறு சொத்துக்களாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் சரியாக இனம் காணப்பட்டு வகைப்படுத்தபட வேண்டும் என்பது. |
| (iv) | நியமத்தின் 51 ஆம் பந்திக்கு அமைய, அசையா சொத்துக்களுக்கான பயனுள்ள ஆயுள் காலம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தால் மொத்த கிரயம் ரூபா. 301.39 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதுடன் சொத்துக்களில் ஏற்பட்டுள்ள மதிப்பீடு வழுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் மீள் திருத்தம் செய்வதற்கு மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு தொடக்கம் சொத்துக்களின் தேய்மானம் செய்யக்கூடிய பெறுமதி 5% Residential Value கீழ் பெறுமானத் தேய்வு ஒதுக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்திற்கு அமைய சொத்துக்களின் பயனுள்ள ஆயுட் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும் என்பது. |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 21 | | |
| | நியமத்தின் 23 (அ) பந்தியின் பிரகாரம், கணக்கீட்டு காலப் பகுதியின் இறுதியில் வெளிநாட்டு நாணய உருப்படியை வருடத்தின் இறுதி தினத்தில் வெளியிடப்படும் உத்தியோகபூர்வ அந்நிய செலாவணி மாற்று வீதத்தினை (Closing Exchange Rate) பயன்படுத்தி மாற்றி அந்நிய செலாவணி வீத இலாபம் அல்லது நட்டத்தினைக் கணக்கீடு செய்தல் வேண்டும். எனினும், கூட்டுத்தாபனத்தினால் கடல் மணல் அகழ்வு செயற்திட்டத்தின் கொடுப்பனவு நடவடிக்கைகளுக்காக இலங்கை வங்கியில் பேணப்பட்டு வரும் டொலர் கணக்கில் 2021 | அந்நிய செலாவணி இலாபம் அல்லது நட்டத்தினைக் கணக்கீடு செய்வதற்காக பிழையான அந்நிய செலாவணி மாற்று வீதத்தினை பயன்படுத்திய காரனத்தால் வருமானக் கூற்றுக்கு ஏற்பட்ட தாக்கம் ரூபா.2.15 மில்லியன் மாத்திரமே ஆகும். | நியமத்திற்கு அமைய வெளிநாட்டு நாணய மீதியை மாற்றம் செய்தற்காக அத்தருண அந்நிய செலாவணி வீதத்தினைப் பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட மீதியான அமெரிக்க டொலர் 2.18 மில்லியனை ரூபா பெறுமதிக்கு மாற்றும் போது அந்தத் தினத்தில் காணப்பட்ட மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட அத்தருண அந்நிய செலாவணி வீதமான (Spot Exchange Rate) ரூபா. 200.4338 அடிப்படையில் மாற்றப்படாத காரணத்தால் அந்நிய செலாவணி மாற்றல் இலாபம் ரூபா. 4.72 மில்லியனால் மிகை கணக்கீடு செய்யப்பட்டு இருந்ததுடன் அதற்கு அமைய மீளாய்வாண்டில் விரிவான வருமானமும் அந்தத் தொகையினால் மிகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 38 | | |
| (i) | நியமத்தின் 18 ஆம் பந்திக்கு அமைய கட்புலச் சொத்துக்களைப் பெறுமானத் தேய்வு செய்யும் கொள்கையினை நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு இருப்பினும் மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுகளில் ரூபா. 5.82 மில்லியனாக இனம் காணப்பட்டிருந்த கட்டுபலச் சொத்துக்கள் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த வீதம் கூட்டுத்தாபனத்தினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகின்றேன். 2022 ஆம் ஆண்டில் இந்த தவறு திருத்தப்படும். | நியமத்திற்கு அமைய அசையாச் சொத்துக்கள் பெறுமானத் தேய்வு செய்யும் வீதம் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும் என்பது. |
| (ii) | நியமத்தின் 29 ஆம் பந்திக்கு அமைய அனுமதிப் பத்திரத்தினை புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு செலவு என்பன மூலதனமாக்கப்பட முடியாத போதிலும், கூட்டுத்தாபனத்தினால் SAP மென்பொருளுக்காகக் கொள்வனவு செய்திருந்த 55 அனுமதிப் பத்திரங்களை புதுப்பிக்கும் செலவான ரூபா.1.09 மில்லியன் நடைமுறை மூலதன வேலைக் கணக்கின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டில் நடைமுறை மூலதன வேலைக் கணக்கு மற்றும் வருடத்தின் நிறுத்தி வைக்கப்பட்ட ஈட்டங்களின் கணக்கு அந்த பெறுமதியினால் மிகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | SAP (User License) உரிமையினைப் பெற்றுக் கொள்ளும் போது கொள்வனவு செய்யப்பட்ட வருடத்திற்கான வருடாந்த பராமரிப்பு செலவினை (Annual Maintenance Cost) செலுத்த தேவையில்லை. அதற்கமைய முதலாவது ஆண்டிற்காக அவ்வாறான செலவினை தனியாகக் கணக்கீடு செய்ய முடியாது. | நியமத்தின் பிரகாரம் சரியாக செலவு வகைப்படுத்தப்படல் வேண்டும் என்பது. |
| (ஊ ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 40 | | |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்ட மொத்த செலவு ரூபா.160.30 மில்லியன் பெறுமதியான இரு முதலீட்டு சொத்துக்களின் நியாயப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. அவ்வாறே, கூட்டுத்தாபனம் நீண்டகால குத்தகை அடிப்படையில் வெளித்தரப்பினருக்கு வழங்கி இருந்த ரூபா.9.41 மில்லியன் மொத்த கிரயத்தினை கொண்ட 3 கட்டிடங்கள், முதலீட்டு சொத்துக்களாக இனம் காணப்பட்டு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | முதலீட்டு சொத்துக்கள், கிரய அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகின்றது. அவற்றின் நியாயப் பெறுமதி மேலதிக தகவலாக வெளிப்படுத்தப்படுகின்றன. | நியமத்திற்கு அமைய முதலீட்டு சொத்துக்களை இனம் காணுதல் மற்றும் கணக்கீடு செய்தல் என்பன மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பது. |
| (எ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 08 | | |
| | ஒரு நிறுவனத்தினால் தமது நிதிக் கூற்றுக்களின் மூலம் தான் ஈடுபடுகின்ற வணிக செயல்பாடுகளின் தன்மை, நிதி தாக்கங்கள் மற்றும் அது செயல்படும் பொருளாதார சூழல் என்பற்றை மதிப்பிடக் கூடிய வகையில் தேவையான தகவல்களை பயன்படுத்துபவர்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டியதுடன் நியமத்தின் 11 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தினால் தமது ஒவ்வொரு செயல்பாட்டு பிரிவு தொடர்பான தகவல்களை வெவ்வேறாக அறிக்கையிடுதல் வேண்டும். அவ்வாறு இருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தின் செயல்பாடானது முக்கியமான சில கிரய நிலையங்கள் உள்ளடங்களாக பல்வேறு பிரிவுகள் கூட்டுத்தாபனத்தினால் பேணப்பட்டு வருகின்ற போதிலும் நியமத்துக்கு அமைய அந்த முக்கிய பிரிவுகளின் செயல்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் வெவ்வேறாக அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | ஆண்டறிக்கையில் பக்க இலக்கம் 06 தொடக்கம் 79 வரையில் ஒவ்வொரு பிரிவினதும் செயல்பாடுகள் விரிவாகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக நிதிக்கூற்றுகளில் குறிப்பு 1 மற்றும் 2 இன் கீழ் முக்கிய செயல்பாட்டுப் பிரிவுகளின் வருமானம் மற்றும் நேரடி மொத்த கிரயம் என்பன வெவ்வேறாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. | நியமத்தின் பிரகாரம் செயல்பாட்டு நடவடிக்கைகள் வெவ்வேறாக வெளிப்படுத்தப்படும் வகையில் பிரிவுகளுக்கான கணக்குகள் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பது. |
| (ஏ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 15 | | |
| | மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தினால் வெளித் தரப்பினருக்கான செயற்திட்டத்தினை (Client Project) நிறைவேற்றுவதன் மூலம் கிடைக்கப் பெற்ற ஒப்பந்த வருமானத்தினை நிதிக்கூற்றுகளில் இனம் காணும் போது கூட்டுத்தாபனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட | நிலையான தொழில்நுட்பக் குழுவின் அனுமதி கிடைத்திருக்காத செயற்திட்டங்களுக்காக சேவை வழங்குனரினால் செலுத்துவதற்கு பரிந்துரை | தாமதமின்றி நிலையான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையினைப் |

| | | |
|---|---|---|
| விலைப்பட்டியல்களின் பெறுமதியில் 90 சதவீதத்திற்கு சமனான ரூபா.1,686.64 மில்லியன் மட்டும் உள்ளடக்கப்பட்டு இருந்தது. அந்த விலைப்பட்டியல்களில் உள்ளடக்கப்பட்ட விகிதங்களுக்காக அமைச்சின் நிலையான தொழில்நுட்ப குழுவின் (STC) அங்கீகாரம் கிடைப்பதற்கு தாமதமான காரணத்தால் விலைப்பட்டியல்களுக்கு உரிய உறுதிப்படுத்தப்பட்ட பெறுமதியில் 10 சதவீதம் காலப் பகுதிக்கான வருமானமாக இனம் காணப்பட்டிருக்கவில்லை. எனினும் உறுதிப்படுத்தப்பட்ட போதிலும், வருமானத்தில் இனங்காணப்படாத இந்த 10 சதவீத வருமானம் தொடர்பில் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செய்யப்பட்ட 90% சதவீதம் ஒப்பந்த வருமானமாகக் கருதப்படும். உறுதிப்படுத்தப்பட்ட எனினும் வருமானமாக இனம் காணப்படாத 10% அளவானது நிதிக்கூற்றுகளில் குறித்த நிலையான தொழில்நுட்பக் குழுவினால் விகிதத்திற்கான அனுமதியினை வழங்கிய பின்னர் சீர் செய்தல்கள் மேற்கொள்ளப்படும். | பெற்றுக் கொண்டு சரியான வருமானம் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும் என்பது. |

### 1.5.3. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான 30 ஆண்டுகளுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த கொள்ளுப்பிட்டி 22 ஆவது ஒழுங்கையில் அமைந்துள்ள சசகாவா இலங்கை ஜப்பான் ஞாபகார்த்த மண்டபத்தின் குத்தகை ஒப்பந்தம் 2017 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்து இருந்த போதிலும், கட்டடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டிருக்காததுடன் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு இருதரப்பினர் இடையே ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கும் 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், காணப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் அல்லது வருடாந்த குத்தகையை அறவிடுவதற்கு 2017 ஆம் ஆண்டின் பின்னர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் குத்தகை வருமானமாக ரூபா.0.27 மில்லியன் மட்டுமே இனம் காணப்பட்டிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தினால் குத்தகைதாருக்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கு அமைய மீளாய்வாண்டின் இறுதி வரையில் கிடைக்க வேண்டிய குத்தகை வருமானம் ரூபா.5.93 மில்லியனால் குறைவாகக் கணக்கீடு | மீளாய்வாண்டின் இறுதி வரையில் இலங்கை ஜப்பான் ஞாபகார்த்த மண்டபத்தின் புதிய மதிப்பீட்டு பெறுமதிக்கு குத்தகை ஒப்பந்தம் உள்ளடக்கப்பட்டிருக்காதுடன் குறித்த நிலுவைத் தொகை 2023 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டிருந்ததுடன் அதனை அடிப்படையாகக் கொண்டு தேவையான சீராக்கல்கள் 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | தீர்மானிக்கப்பட்ட குத்தகை வருமானம் சரியாக மதிப்பீடு செய்யப்பட்டு அட்டுறு அடிப்படையில் நிதிக் கூற்றுகளில் காட்டப்படுதல் வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | கட்டற்ற தடுத்து வைத்தல் அடிப்படையில் (Free Hold Basis) அரசாங்கத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த முத்துராஜவெலவில் அமைந்துள்ள 02 ஏக்கர் பரப்பளவிலான காணி 2019 ஒக்டோபர் 29 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் அமப/19/2832/16/11 கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டிருந்தது, அந்த அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் காணியின் விற்பனைப் பெறுமதியில் அதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த அபிவிருத்தி செய்தல் செலவினை அறவிட்டுக் கொண்டு மீதித் தொகையினை அரசின் திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்குமாறு கூட்டுத்தாபனத்திற்குத் தெரிவிக்கப்பட்டு இருந்தது. அதற்கு அமைய 2019 திசெம்பர் 17 ஆம் திகதி காணியினை விற்பனை செய்து ரூபா.272.62 மில்லியன் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், மேற்கொள்ளப்பட்டிருந்த அபிவிருத்தி செலவுகளான ரூபா.21.02 மில்லியன் கழிக்கப்பட்டு திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டிய ரூபா. 251.60 மில்லியன் 2023 பெப்ரவரி வரையிலும் ஒன்றிணைந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அந்த பொறுப்புக்கள் நிதிக்கூற்றுகளில் இனம் காணப்பட்டிருக்காததுடன் இது தொடர்பிலான வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த காணி அபிவிருத்திக்காக கடல் மணலை அள்ளுவதற்குப் பெருமளவான கிரயம் கூட்டுத்தாபனத்தினால் செலவிடப்பட்டுள்ளது. அதற்கு அமைய 02 ஏக்கர் 03 ரூட் 34.51 பேர்ச் கொண்ட இந்த காணித் துண்டுக்கு உரியதாக செலுத்தப்பட வேண்டிய மேம்படுத்தப்படாத பெறுமதி 2019 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காக மேம்படுத்தப்படாத பெறுமதி உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்த ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அதன் தொகையைத் தீர்க்கும் முறை தொடர்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளது. | அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய மீதித் தொகை அரசின் திரண்ட நிதியத்திற்கு அல்லது காணிகள் ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்தப்படுதல் வேண்டும் என்பது. |
| (இ) | தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் அட்டுறு அடிப்படையில் குத்தகை வருமானத்தை கணக்கீடு செய்யும் போது07 சந்தர்ப்பங்களில் மீளாய்வாண்டுக்கு உரிய குத்தகை வருமானம் ரூபா. 1.31 மில்லியன் குறைவாகவும் 10 சந்தர்ப்பங்களில் ரூபா. 4.74 மில்லியன் அதிகமாகவும் கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தால் மீளாய்வாண்டில் குத்தகை வருமானம் ரூபா.3.43 மில்லியனால் மிகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த மிகை கணக்கீடு மற்றும் குறைபாட்டினை நடப்பாண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அட்டுறு அடிப்படைக்கு இணங்க வருமானம் நிதிகூற்றுகளில் இனம் காணப்படுதல் வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வ/ப எல்ஆர்டிசி சேவைகள் தனியார் கம்பனிக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான கிரிமண்டல மாவத்தையில் அமைந்துள்ள கட்டடத்திற்காக 2022 பெப்ரவரி 25 ஆம் திகதி அரச பிரதான மதிப்பீட்டாளரின் அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு மாதாந்த குத்தகை பெறுமதி ரூபா.0.25 மில்லியனாக தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கு அமைய 2019 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்படும் வகையில் வாடகை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய வருடாந்த குத்தகை வருமானம் ரூபா. 3 மில்லியனாக இருந்த போதிலும் மீளாய்வாண்டில் குத்தகை வருமானமாக ரூபா. 0.24 மில்லியன் மட்டும் இனம் காணப்பட்ட காரணத்தால் வருடத்தின் குத்தகை வருமானம் ரூபா. 2.76 மில்லியனாலும் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் குத்தகை வருமானம் இனம் காணப்பட்டிருக்காத காரணத்தால் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் திரண்ட இலாபம் ரூபா.5.52 மில்லியனாலும் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். 2021 ஆம் ஆண்டின் வருமானம் கணக்கீடு செய்யப்பட்டதன் பின்னர் புதிய விலை மதிப்பீடு தொடர்பாக குறித்த ஆவணம் கணக்குக் கிளைக்குக் கிடைத்திருந்த காரணத்தால் 2021 ஆம் ஆண்டின் நிதிக் ற்றுகளில் குறித்த சீராக்கல்களை மேற்கொள்ள முடியாது இருந்தது. அவ்வாறு இருந்த போதிலும் நிலுவைத் தொகையினை 2022 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு ஆண்டுக்கு உரிய வருமானங்கள் மற்றும் செலவுகளை திட்டவட்டமாக அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் என்பது. |
| (உ) | மீளாய்வாண்டுக்கு உரித்தல்லாத விளம்பரப் பலகை வருமானம் ரூபா. 2.24 மில்லியன் வருமானத்தில் இனம் காணப்பட்ட காரணத்தால் வருடத்தின் இலாபம் அந்த அளவினால் மிகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். | வருடத்திற்கு உரிய வருமானம் சரியாகக் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும் என்பது. |
| (ஊ) | கூட்டுத்தாபனத்தினால் பேர வாவியில் சேற்று மண்ணை அகற்றுவதற்காக 2019 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா. 398.25 மில்லியனான 3 இயந்திரங்களின் பெறுமதி மீளாய்வாண்டு இறுதி வரையிலும் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் இயந்திரங்களின் பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அனைத்து சொத்துக்களும் சரியாக இனம் காணப்பட்டு நிதிக் கூற்றுகளில் காட்டப்படுதல் வேண்டும் என்பது. |
| (எ) | கூட்டுத்தாபனத்தினால் அரச வணிக திணைக்களத்தின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளாது, பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் மட்டும் | சாலமுல்ல வீட்டு செயற்திட்டத்தினை நிர்மாணிப்பதற்கு உரிய நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து கிடைக்க | கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பில் நிதிப் பிரமாணம் 104 |

| | | | |
|---|---|---|---|
| | மொத்தமாக ரூபா. 81.50 மில்லியன் மீளாய்வாண்டில் அறவிட முடியாக் கடனாக இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டு இருந்தது. 2022 மார்ச் 18 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் MRW 5461 கொண்ட பணிப்பாளர் சபை தீர்மானத்தின் மூலம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் சாலமுல்ல வீட்டு செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா.34.13 மில்லியனும் 2021 ஒக்டோபர் 15 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் MRW 5404 கொண்ட பணிப்பாளர் சபை தீர்மானத்தின் மூலம் டி.ஏ.ராஜபக்ஷ ஞாபகார்த்த மத்திய நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக கிடைக்க வேண்டிய தொகையில் ரூபா.47.37 மில்லியன் அறவிடமுடியாகடனை பதிவழிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. மேலும் இந்த அறவிட முடியாத கடனை அடையாளம் காண்பதற்கு முன்னர் இந்த கடன் ஏற்படுவதற்குக் காரணமான விடயங்கள், பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் என்பவற்றை தீர்மானிப்பதற்கு முறையான விசாரணைகள் செய்யப்பட்டதற்கு அல்லது எதிர்காலத்தில் இந்த நட்டம் தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்கு பணிப்பாளர் சபையினால் கருத்தில் கொள்ளப்பட்டது என்பதற்கான தகவல்கள் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் மூலம் அல்லது பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதற்கமைய கூட்டுத்தாபனத்தினால் இந்த நட்டம் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளும் போது ஒழுங்கான முறையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | வேண்டியதாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்த தொகையில் ரூபா. 34.13 மில்லியன் தொகையும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் அறவிட முடியாக் கடனாக நீக்கப்பட்டுள்ளது. டி. ஏ. ராஜபக்ஷ ஞாபகார்த்த மத்திய நிலையத்தினை நிர்மாணித்தல் தொடர்பில் இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போது கூட்டுத்தாபனத்திற்கு இன்னமும் அறவிடுவதற்கான தொகை இல்லை எனத் தீர்மானிக்கப்பட்டதனால், சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைப்பட்டியலின் மீதித் தொகையான ரூபா. 47.37 மில்லியன் தொகையினை பணிப்பாளர் சபை அனுமதியின் பின்னர் ஏடுகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. | இற்கு அமைய விசாரணை செய்யப்பட்டு அதற்குப் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து நட்டம் அறவிடப்பட வேண்டும். |
| (ஏ) | கூட்டுத்தாபனத்தினால் SAP மென்பொருளை பயன்படுத்துதல் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த மென்பொருளை கொள்வனவு செய்த செலவான ரூபா.12.4 மில்லியன் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் செய்யப்பட்டு வரும் வேலையின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், அசையா சொத்துக்களாக | 2022 ஆம் ஆண்டில் இதனை கட்டுபுலச் சொத்தாக மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டு மென்பொருள் தொடர்பில் காணப்படும் சிக்கல்கள் உடனடியாக தீர்க்கப்படுதல் வேண்டும் என்பது. |

மூலதனமாக்கப்பட்டு அதற்குரிய பதிவழிப்புகளை மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. மேலும், மென்பொருளை நிறுவுவதற்கு ஒப்பந்தம் கையளிக்கும் கடிதம் வழங்கப்பட்டு சுமார் 5 ½ ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் முறையான நிபந்தனைகளுடனான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிராததுடன், ஒப்பந்தக் கையளிப்புக் கடிதத்தின் பிரகாரம் ஆரம்ப ஒப்பந்த பெறுமதி ரூபா. 4.6 மில்லியனாக இருந்த போதிலும் உண்மையான செலவு ரூபா. 12.4 மில்லியன் வரையில் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 1.5.4. அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத அத்துருகிரிய கொத்தலாவல அதிவேக வீதி உள்ளக இடைமாற்றலுக்கு அண்மிய நிரல் பூங்கா ஒன்றை அமைத்தல் மற்றும் வடிகால்களை மேம்படுத்துதல் என்பவற்றுக்கான செயற்திட்டங்களை சௌபாக்கியத்தின் நோக்கு எனும் வேலைத் திட்டத்தின் கீழ் முன்னாள் ஜனாதிபதி அவர்களின் வாய்மொழி மூலமான அறிவுரைகளின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்ததுடன் ஆரம்பிப்பதற்காக வரிசை அமைச்சிடமிருந்து நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதே போன்று திறைசேரி நிதி ஒதுக்கீட்டினை அங்கீகரித்துக் கொள்வதற்காக கூட்டுத்தாபனம் சமர்ப்பித்திருந்த அமைச்சரவை பத்திரத்திற்கான அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்த வகையில் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பரிந்துரைகளுக்கு அமைய செயற்திட்ட முன்மொழிவுகளுக்காக விரிவான சாத்தியக்கூற்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>எவ்வாறு இருப்பினும் செயற்திட்டம் 2020 திசெம்பர் 15 ஆம் திகதி | இந்த முன்மொழியப்பட்ட செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் இதுவரையில் 1.5 கிலோ மீட்டர் நீளத்தைக் கொண்ட பகுதிக்கு உரிய பணிகள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டு உள்ளதுடன் மேலதிக பராமரிப்பு நடவடிக்கைகளைப் பேணிச் செல்வதற்காக செலவிடப்பட வேண்டிய மொத்த செலவினைக் கூட்டுத்தாபனம் ஏற்கத் தேவையில்லை என்பதனால், அதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் கடுவலை மாநகர சபையிடம் ஒப்படைக்கும் வேலைத் திட்டத்தினைத் தயாரித்தல் தற்போது இடம் பெற்று வருகின்றது. | வருடாந்த வரவு செலவு மதிப்பீட்டின் மூலம் நிதி ஒதுக்கப்படாத மற்றும் முறையான முன் அனுமதி பெற்றுக் கொள்ளாது செயற்திட்டங்களை ஆரம்பித்தல் ஆகாது என்பது. |

ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2022 செப்டம்பர் வரையிலும் கூட்டுத்தாபனத்தின் நிதியிலிருந்து ரூபா.213.95 மில்லியன் இதற்காக செலவிடப்பட்டிருந்தது. அதில் எந்த ஒரு தொகையையும் பொதுத் திறைசேரியிடமிருந்து மீள் நிரப்பு செய்வதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த வேலைகளின் பெறுமதி ரூபா. 129.33 மில்லியன் நடைமுறை வேலைகளாக காட்டப்பட்டிருந்தது.
அதே போன்று நிர்மாணிக்கப்பட்ட பூங்காவினைப் பராமரிப்பு செய்து பேணிச் செல்லுவதற்காக கடுவெல மாநகர சபையிடம் ஒப்படைப்பதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்த காரணத்தால் மாதாந்தம் ரூபா. ஒரு மில்லியன் அளவில் பராமரிப்புக்காக செலவிடுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு நேர்ந்துள்ளது. நடைபாதை மற்றும் அதனை சூழ்ந்துள்ள வடிகால்களினால் வெள்ள நிலைமைக்கு உள்ளாகி இருந்ததுடன் அந்த இடத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மலசலகூட தொகுதிக்கு முறையான நீர் வழங்கல் வசதி இல்லாத காரணத்தால் அந்த மலசல கூட தொகுதி மூடப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா. 800 மில்லியன் தொகையான திறைசேரியின் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் சேற்று மண்ணினை அகற்றி பேரே வாவியினை சுத்தப்படுத்துவதற்கான செயற்திட்டத்தின் வேலைகள் 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டிலேயே பூர்த்தி செய்யப்பட வேண்டி இருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த முன்னேற்றம் 21 சதவீதமான குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. இந்த செயற்திட்டத்திற்குத் தேவையான இயந்திர உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காகத் திறைசேரி நிதி ரூபா.283.50 மில்லியனைப் பெற்றுக் கொடுப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கி இருந்தது. அவ்வாறு இருந்த போதிலும் அந்த எல்லையினை விஞ்சி (வற் வரி நீங்கலாக) 03 இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு உரிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பெறுமதி ரூபா.282 மில்லியனாக இருந்த போதிலும் அதனை விஞ்சி ரூபா.403.9 மில்லியனுக்கு இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இந்த இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல் தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், நீதிமன்ற செயல்பாடும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த இயந்திரத்தினைக் திறைசேரி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம் திட்டமிடப்பட்ட வகையில் சரியான முகாமைத்துவத்துடன் செயல்படுத்தப்பட வேண்டியதுடன் சட்ட ரீதியான நடைமுறைகள் பூர்த்தி அடைந்ததன் பின்னர் தவறிழைத்த தரப்பினர் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது.

| | | |
|---|---|---|
| மீண்டும் அமைச்சரவை அனுமதியினைப் பெற்றுக் கொள்ளாது 2019 ஓகஸ்ட் மாதத்தில் மொத்தமாக ரூ.403.99 மில்லியன் பெறுமதியான 3 இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இதில் ரூபா.244.7 மில்லியன் மற்றும் ரூபா.75.99 மில்லியன் செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த இரண்டு இயந்திரங்கள் 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் செயல்பாடற்றுக் காணப்பட்டன. கடன் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த அந்த இயந்திரங்களுக்கான தவணைப் பணமாக ரூபா. 169.61 மில்லியன் 2021 ஆம் ஆண்டு இறுதி வரையில் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. அமைச்சரவை அனுமதி எல்லையினை விஞ்சி கொள்வனவு மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், இதில் ஒரு இயந்திரமான புவி நீரடி இயந்திரத்திற்காகக் கூட்டுத்தாபனத்தின் நிதியிலிருந்து ரூபா.82.46 மில்லியனும் மற்றும் வழங்குனருடன் ஏற்படுத்தியிருந்த தீர்வு நிபந்தனைகளுக்கு அமைய தாமதமாக கொடுப்பனவு செய்ததற்கான வட்டியாக ரூபா. 11.73 மில்லியனும் செலுத்த நேரிட்டிருந்தது. | கொள்வனவு செய்வதற்கான நிதி இலங்கை காணி அபிவிருத்தி செய்தல் கூட்டுத்தாபனத்தின் நிதியத்தில் இருந்து செலுத்தி குறித்த இயந்திரத்தினைக் கொள்வனவு செய்வதற்கு உரிய அனுமதியினை எதிர்பார்த்து தயாரிக்கப்பட்டு இருந்த அமைச்சரவைப் பத்திரம் தற்போது வரிசை அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |

**1.6. பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1. பெற வேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டுக்கு உரிய கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய மீதிகளில் உள்ளடங்கி இருந்த ரூபா.1,559.82 மில்லியன் வியாபார கடன்பட்டோர் மீதி பெறுமதியில் 2 வருடங்களுக்கும் 5 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் தொட்டு அறவிடப்படுவதற்காக உள்ள மீதி ரூபா.695.63 மில்லியனாக உள்ளதுடன், 05 வருடங்களை விஞ்சிய கடன்பட்டோர் மீதி ரூபா.128.87 மில்லியன் ஆகும். | கடன்பட்டோர் மீதி உறுதிப்படுத்தலுக்காகக் கடிதம் அனுப்பப்பட்ட அனைத்து கடன்பட்டோரும் அரச நிறுவனங்களாக உள்ளதுடன் முன்னைய ஆண்டுகளைப் போலவே இந்த ஆண்டும் மீதி உறுதிப்படுத்தல்கள் கிடைக்கவில்லை. | கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்க வேண்டிய பணத்தினை உரிய நிறுவனத்துடன் கலந்துரையாடி உடனடியாக அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் |

| | | | |
|---|---|---|---|
| | அதே போன்று கூட்டுத்தாபனத்தினால் கணக்காய்விக்காக கோரப்பட்டிருந்த கடன்பட்டோர் மீதி உறுதிப்படுத்தல்களின் பெறுமதி ரூபா. 1,134.86 மில்லியனாக இருந்ததுடன் அதில் எந்த ஒரு கடன்பட்டோர் மீதி உறுதிப்படுத்தலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | கடன்பட்டோர் மீதி உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என்பது. |
| (ஆ) | அதே போன்று அந்த வியாபாரக் கடன்பட்டோர் மீதியினுள் உள்ளடக்கப்பட்ட சேவை வழங்குனர் செயற்திட்டங்களில் இருந்து கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய மொத்த தொகை ரூபா. 956.46 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா. 40.92 மில்லியன் தொகை 4 வருடத்திற்கும் 5 வருடத்திற்கும் இடைப்பட்ட காலம் தொட்டும், ரூபா.128.09 மில்லியன் தொகை 5 வருடத்திற்கு மேற்பட்ட காலமாகவும் காணப்படுகின்றது. அந்த கடன் தொகையினை உடனடியாக தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூட்டுத்தாபனத்தினால் முன்னைய ஆண்டில் கணக்காய்வாளர் அறிக்கையில் கருத்து தெரிவிக்கப்பட்டு இருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அந்த பெறுமதியினைத் தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரச திறைசேரியிடமிருந்து அரச நிறுவனத்திற்கு நிதியினை விடுவித்தல் மட்டுப்படுத்தப்பட்டு இருப்பதனால் அந்த நிறுவனங்களிடம் இருந்து கூட்டுத்தாபனத்திற்குப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய பணத்தினைப் பெற்றுக் கொள்வதில் கவனத்தில் கொள்ளத்தக்களவு தாமதம் ஏற்பட்டுள்ளது. | கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்க வேண்டிய பணத்தினை உடனடியாக அறவிட்டு கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

### 1.6.2. செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுகளில் வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளுள் உள்ளடக்கப்பட்டுள்ள ஒப்பந்த கடன் கொடுத்தோர் மீதியினுள் காணப்படும் ரூபா.826.68 மில்லியன் பெறுமதியான 2 வருடத்திற்கும் 5 வருடத்திற்கும் இடைப்பட்ட காலம் தொட்டு தீர்க்கப்படாத கடன் கொடுத்தோர் மீதி ரூபா.201.10 மில்லியன் ஆக உள்ளதுடன் 5 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாது உள்ள மீதி ரூபா.24.76 மில்லியன் ஆகும். | தீர்க்கப்படாது இருக்கும் கடன் கொடுத்தோர் மீதிகளில் ரூபா. 120 மில்லியன் உரித்தாவது Rhode Neilson A/S நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய 575,000 யூரோ தொகையாகும். இந்த பணம் தீர்க்கப்படாமை உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் கட்டளைக்கு அமைய என்பதுடன் ஏனைய நீண்ட | தீர்க்கப்படாத மீதிகளை உடனடியாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் என்பது. |

| | | |
|---|---|---|
| | காலம் செலுத்தப்படாது உள்ள மீதி உரித்தாவது ஒப்பந்த கடன் கொடுத்தோரிடம் இருந்து தடுத்து வைக்கப்பட்ட பிடி காசுக்காக என்பதுடன், அந்தத் தொகை தீர்க்கப்படுவது ஒப்பந்த கடன் கொடுத்தோரினால் விண்ணப்பிக்கப்பட்டதன் பின்னர் மற்றும் செய்யப்பட்ட வேலைகளில் குறைபாடுகள் உள்ளதா என குறித்த பொறியியலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே ஆகும். | |

## 1.7. தொடர்புடைய தரப்பினர்கள் மற்றும் தொடர்புடைய தரப்பினர்களின் கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் ,றுதியில் கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படும் நிறுவனமான நில மீட்பு மற்றும் அபிவிருத்தி கம்பனியிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்க வேண்டியதான ரூபா.268.89 மில்லியன் காட்டப்பட்டிருந்த போதிலும் நிறுவனத்தின் நிதிக்கூற்றுகளுக்கு அமைய அது ரூபா.328.89 மில்லியனாக காட்டப்பட்டிருந்ததால் அவற்றுக்கிடையே ரூபா.60 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அதே போன்று அந்த நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டியதாக கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுகளில் ரூபா.83.56 மில்லியன் காட்டப்பட்டிருந்த போதிலும் அந்த நிறுவனத்தின் நிதிக்கூற்றுகளில் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற வேண்டியதாக ரூபா.93.40 மில்லியன் காட்டப்பட்டிருந்தது என்பதனால் அவற்றுக்கிடையே ரூபா.9.84 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அவ்வாறு இருப்பினும் இந்த வித்தியாசங்களுக்குக் காரணங்களான விடயங்கள் கூட்டுத்தாபனத்தினால் இனம் காணப்பட்டு இருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தின் கணக்கு மற்றும் ரெடக்கோ கம்பனியின் கணக்கு என்பவற்றை தயாரிக்கும் போது இரண்டு நிறுவனங்களுக்கு இடையில் உள்ளக கணக்குகளில் வித்தியாசம் ரூபா.303,885 மாத்திரம் ஆகும். | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்வதற்கு முன்னர் இரு நிறுவனங்களுக்கும் இடையிலான நடைமுறைக் கணக்கினை ஒப்பிட்டு வித்தியாசங்களுக்கான காரணங்கள் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நில மீட்பு மற்றும் அபிவிருத்தி கம்பனி வணிக முயற்சியொன்றாக கடல் மணல் பொதி செய்து விற்பனை செய்யும் செயற்திட்டம் ஒன்றினை ஆரம்பிக்க வேண்டும் என இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையினால் 2018 ஒக்டோபர் 04 ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான கட்டடத்தினை நிர்மாணிப்பதற்குக் கூட்டுத்தாபனத்தினால் ரூபா. 200 மில்லியன் கடன் தொகையினை நிறுவனத்திற்கு 2019 மே 07 ஆம் திகதி வழங்கி இருந்தது. குறித்த நிர்மாணிப்பினை மேற்கொள்ளுவதற்காக கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணியினை இரு தரப்பினர் இடையே குத்தகை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாது நிறுவனத்திற்கு வழங்கியிருந்தது. எவ்வாறு ,ருப்பினும் மீளாய்வாண்டு ,றுதியில் செயற்திட்டத்தினை முடிவுறுத்துவதற்கு ஒழுங்கான கிரய நலன் பகுப்பாய்வு மேற்கொள்ளாது கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் நில மீட்பு மற்றும் அபிவிருத்தி கம்பனியால் ரூபா.331.02 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டடம் அரச விலை மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா. 326.30 மில்லியனுக்கு கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டு அது அரச நிறுவனமான லிட்டோ கேஸ் டெர்மினல் லங்கா (தனியார்) நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.<br><br>கூட்டுத்தாபனத்தினால் நிறுவனத்திற்கு வழங்கியிருந்த கடன் தொகைக்கு 12 சதவீத வருடாந்த வட்டி வீதத்தின் கீழ் மாதாந்தம் ரூபா. 1.67 மில்லியன் வீதம் 10 வருடங்களில் கடனை மீள செலுத்தும் அடிப்படையில் நிறுவனத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் வியாபாரம் இடை நடுவில் நிறுத்தப்பட்ட காரணத்தினால் கடன் மற்றும் வட்டியை செலுத்துவதற்கு நிறுவனம் தவறி ,ருந்தது. ,ன்னமும் செலுத்தப்பட வேண்டிய கடன் தொகை ரூபா. 141.2 மில்லியனும் மற்றும் செலுத்தப்பட வேண்டிய வட்டி ரூபா. 49.46 மில்லியனுமாக கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்க வேண்டிய மொத்த பெறுமதி ரூபா.190.70 மில்லியன் ஆகும். மேலும், நிர்வகிக்கும் நிறுவனத்தின் கணக்குகளின் | இந்த செயற்திட்டம் வெற்றியடையவில்லை என்பதால் REDECO நிறுவனத்தினால் செயற்திட்டத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் கூட்டுத்தாபனம் மற்றும் REDECO நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் இணக்கப்பாட்டின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஒப்படைக்கும் போது குறித்த கட்டடத்தின் அரச விலை மதிப்பீட்டாளரின் பெறுமதியான ரூபா.326 மில்லியன் பெறுமதி நிறுவனத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்துவதற்கு உள்ள ரூபா.49.46 மில்லியனான திரண்ட வட்டி மற்றும் கடன் தொகையில் ரூபா.58.8 மில்லியன், ஒப்படைத்தல் பெறுமதிக்கு ஈடு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய ,ன்னமும் கடன் தொகையில் ரூபா.141.2 மில்லியன் அறவிடப்பட வேண்டியதுடன், நிறுவனத்தின் நிதி இயலுமைக்கமைய அந்தத் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு முன்னர் முறையான சாத்தியவளக் கற்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பது. |

பிரகாரம் செயற்திட்டத்திற்காக நிறுவனத்தினால் செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா.382.50 மில்லியனாக ,ருந்தது. கூட்டுத்தாபனத்தினால் அவ்வப்போது கொண்டு வரப்பட்டிருந்த முறையற்ற தீர்மானங்களின் காரணமாக நிறுவனத்தின் செயல்பாட்டு நடவடிக்கைகளுக்கு பாதகமான தாக்கம் மற்றும் நிதி ரீதியான பாதிப்பு நிலைமையும் ஏற்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

**1.8. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 757 (2) | வருடாந்த இருப்பு மெய்மையாய்வுச் சபையின் அறிக்கை கிடைத்ததன் பின்னர் வேறுபாடுகள், பற்றாக்குறைகள் மற்றும் காணாமல் போனவை ஏதேனும் இருக்குமாயின் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 2023 ஜனவரி மாதம் வரையிலும் மீளாய்வாண்டின் இருப்பு மெய்மையாய்வின் போது ஏற்பட்டிருந்த ரூபா.4.32 மில்லியன் குறைபாடு மற்றும் ரூபா.1.26 மில்லியன் மிகை தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த இருப்பு மெய்மையாய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்த மிகை மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பில் குறித்த தரப்பினரிடமிருந்து காரணங்கள் விசாரிக்கப்பட்டு அதற்கான காரணங்களை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த காரணங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதிப் பிரமாணத்திற்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 17 ஆம் திகதிய அரச நிதி திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் 08/2019 | 2020 ஆம் ஆண்டு தொடக்கம் பொருட்கள், வேலை, மதியுரை சேவை அல்லது மதியுரை அல்லாத சேவையை வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ள அனைத்து | 2020 ஜூலை 15 ஆம் திகதி தொடக்கம் கூட்டுத்தாபனம் பெறுகை நிறுவனமாக (PE) தேசிய e-GP கட்டமைப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் | சுற்றறிக்கையின் அறிவுரைகளுக்கு அமைய e-GP கட்டமைப்பு நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அரச நிறுவனங்களும் 2020 ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் பெறுகை நிறுவனமாக (PE) தேசிய e-GP கட்டமைப்பில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் 2023 பெப்ரவரி 07 ஆம் திகதி வரையிலும் அதற்கமைய தொடர்புடைய உத்தியோகத்தர்களைப் பதிவு செய்தல் (Registration of Liaison Officers - LOS), விற்பனையாளர்களைப் பதிவு செய்தல் (Registration of Venders), வருடாந்த பெறுகைகள் திட்டத்தினை பிரசுரித்தல், பெறுகை அறிவித்தல்களை பிரசுரித்தல் மற்றும் சந்தை விலை ஒப்பீட்டு முறைக்காக (Shopping Method) இலத்திரனியல் பெறுகைக் கட்டமைப்பினை பயன்படுத்துவதற்குக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கூட்டுத்தாபன ஒருங்கிணைப்பு உத்தியோகத்தராக பிரதிப் பொது முகாமையாளர் (வழங்கல் மற்றும் களஞ்சிய சாலை) பதிவு செய்யப்பட்டுள்ளார். எதிர்காலத்தில் போதிய அளவு பயிற்சி வேலைத் திட்டங்கள் மற்றும் கலந்துரையாடல் மூலம் கூட்டுத்தாபனம் கொள்முதல் நடவடிக்கைகளை e-GP ஒழுங்கமைப்பின் மூலம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | 1994 ஜூன் 14 ஆம் திகதிய பீஈ 1/54/1 இலக்கமுடைய பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய திறைசேரியினால் அனுமதி வழங்கப்பட்ட நலன்களை மட்டும் பணிப்பாளர் சபையின் அனுமதியின் அடிப்படையில் ஊழியர்களுக்கு வழங்க முடியும். அவ்வாறு இருக்கும் போது திறைசேரியின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளாது கூட்டுத்தாபனத்தின் 12 உத்தியோகத்தர்களினால் | கூட்டுத்தாபனத்தின் பதவியணி உத்தியோகத்தர்களினால் சுங்க தீர்வை அற்ற அனுமதிப் பத்திரத்தின் கீழ் மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக இலங்கை வங்கியில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த கடன் தொகையின் வட்டியில் ⅔ தொகையினை பணிப்பாளர் சபை அனுமதியின் | சுற்றறிக்கையின் அறிவுரைகளுக்கு அமைய செயல்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மோட்டார் வாகனங்களைப் பெற்றுக் கொள்வதற்காக வங்கிகளில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த கடன் தொகைகளில் மீளாய்வாண்டுக்கு உரிய வட்டியில், 2/3 பங்கினை அதாவது ரூபா.608,929 தொகை பணிப்பாளர் சபை அனுமதியின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது. | அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் மூலம் மீள் நிரப்பல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) 2003 ஜுன் 02 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் இலக்கம் பீஈடி/12 | | | |
| 4.2.6. ஆம் பிரிவு | கூட்டுத்தாபனத்தின் காலாண்டு முன்னேற்ற அறிக்கை குறித்த காலாண்டு முடிவடைந்து 30 நாட்களுக்குள் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு மற்றும் வரிசை அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தங்களது அவதானிப்புடன் இணங்குகின்றேன். | சுற்றறிக்கையின் அறிவுரைகளின் பிரகாரம் காலாண்டு முன்னேற்ற அறிக்கை பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு மற்றும் வரிசை அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1. நிதி விளைவுகள்

மீளாய்வாண்டுக்கு உரிய கூட்டுத்தாபனத்தின் வரிக்கு முன்னைய இலாபம் ரூபா.1,263 மில்லியனாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னைய இலாபம் ரூபா.2,500.79 மில்லியன் ஆகும். அதற்கமைய வரிக்கு முன்னைய இலாபத்தில் ரூபா.1,237.79 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டில் சேவை வழங்குனர் செயற்திட்டம் மற்றும் மணல் விற்பனையில் இருந்து கிடைத்த வருமானம் ரூபா.2,332.16 மில்லியனால் அதிகரித்திருந்த போதிலும் முன்னைய ஆண்டில் காணி விற்பனையில் இருந்து ரூபா.2,506.4 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டு இருந்த போதிலும், மீளாய்வாண்டில் அந்த வருமானம் இல்லாமை மற்றும் ஏனைய 6 செயல்திட்டங்களில் இருந்து கிடைத்த வருமானம் ரூபா.345.49 மில்லியனால் குறைவடைந்தமை மற்றும் விற்பனை மொத்த செலவு முன்னைய ஆண்டை விட ரூபா. 990.19 மில்லியனால் அதிகரித்தமை என்பன முக்கியமான காரணங்களாக இருந்தன.

**2.2. முக்கிய வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய மீளாய்வாண்டு மற்றும் முன்னைய வருடத்திற்கு உரிய நிறுவனத்தின் நிதி விளைவுகளை மதிப்பீடு செய்த போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| ஆண்டு | 2021<br>ரூபா மில்லியன் | 2020<br>ரூபா மில்லியன் |
|---|---|---|
| விற்பனை | 4,441 | 4,926 |
| அரச பங்களிப்பு மற்றும் ஏனையவை | 2,352 | 2,379 |
| | 6,793 | 7,305 |
| நேரடி செலவுகள் | 4,131 | 3,141 |
| மொத்த இலாபம் | 2,662 | 4,164 |
| வரிக்கு முன்னைய லாபம் / (நட்டம்) | 1,263 | 2,501 |

(அ) மீளாய்வாண்டில் வரிக்கு முன்னைய இலாபம் குறைவடைந்து இருந்ததுடன் அதற்கு முக்கியமான காரணமாக இருந்தது நிர்வாக செலவுகள் 13.58% இனால் அதிகரித்திருந்தமை ஆகும்.

(ஆ) மொத்த வருமானத்தில் 35 சதவீதம் திறைசேரி மானியங்களாக இருந்ததுடன் 35 சதவீதம் கடல் மணல் விற்பனையில் இருந்தும், 25 சதவீதம் சேவை வழங்குனர் செயற்திட்டங்களின் மூலமும் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டில் நேரடி செலவுகள் ரூபா. 3,141 மில்லியன் தொடக்கம் ரூபா. 4,131 மில்லியன் வரையில் 31.5 சதவீதத்தினால் அதிகரித்து இருந்தது. இதற்கான முக்கிய காரணமாக சேவை வழங்குனர் செயற்திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவு மற்றும் கடல் மணல் விற்பனை செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த செலவு என்பன அதிகரித்திருந்தமை காரணமாக இருந்தது.

**2.3. விகிதப் பகுப்பாய்வு**

முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது தேறிய இலாப விகிதம் 34 சதவீதம் தொடக்கம் 15 சதவீதம் வரையில் குறைவடைந்து இருந்ததுடன் காணி விற்பனையில் இருந்து எதுவித வருமானமும் கிடைத்திருக்காமை மற்றும் மீளாய்வாண்டில் விற்பனை கிரயம் அதிகரித்திருந்தமை இந்த நிலைமைக்கு முக்கியமான காரணமாக இருந்தது.
முன்னைய ஆண்டில் 2.24:1 ஆகக் காணப்பட்ட நடைமுறை விகிதம் மீளாய்வாண்டில் 2.28:1 வரையில் அதிகரித்திருந்தது. அதே போன்று முன்னைய ஆண்டில் 1.82:1 ஆகக் காணப்பட்ட விரைவு விகிதம் 1.85:1 ஆக வளர்ச்சி அடைந்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தினால் Waste 2 Wealth (Pvt) Ltd எனும் பெயரில் புதிய துணை | கொள்கை ரீதியான புதிய தீர்மானங்களில் ஏற்பட்ட வியாபாரத்தினை | |

| | | | |
|---|---|---|---|
| | கம்பனியொன்றை ஆரம்பிப்பதற்கு 2019 நவம்பர் 04 ஆம் திகதி ரூபா 5 மில்லியனான ஆரம்ப முதலீடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு ஜூன் 01 ஆம் திகதி அந்த கம்பனியின் செயல்பாட்டு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும், அது வரையில் கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா.2.46 மில்லியன் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | மாற்றங்களின் அடிப்படையில், இந்த நிறுவனத்தினை எதிர்காலத்தில் பேணிச் செல்வதற்கான தேவைப்பாடு இல்லை என்பதனால், அந்த சந்தர்ப்பம் வரையில் Waste 2 Wealth (Pvt) Ltd கம்பனியிடம் காணப்பட்ட பணம் கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட்டுள்ளது. மீதித் தொகை நிறுவனத்தினால் செலவிடப்பட்டிருந்ததனால் மீள அளவிடுவதற்கு முடியாது. அதனால் ரூபா.2.46 மில்லியன் அளவிலான தொகையினை தேவையான அங்கீகாரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் செலவாகக் கணக்கு ஏடுகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆரம்பிப்பதற்கு முன்னர் அவற்றின் தேவைப்பாடுகள் தொடர்பில் சாத்தியவளக் கற்கையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது. |
| (ஆ) | ஹொரணை பேருந்து தரிப்பிடம்,- இரண்டாம் கட்ட நிர்மாணிப்பு செயற்திட்டத்திற்கு உரியதான கூட்டுத்தாபனத்திற்கு 2015 பெப்ரவரி 17 ஆம் திகதியில் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா.5.53 மில்லியன் பெறுமதியினை மீளாய்வாண்டு இறுதி வரையிலும் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியாது இருந்ததுடன் செயற்திட்டம் இடை நடுவில் நிறுத்தப்பட்ட காரணத்தால் ரூபா. 12.35 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது என செயற்திட்டத்தினை நிறுத்தியமை தொடர்பில் கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த கிரயம் தொடர்பான பொழிப்பு அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தினை தற்காலிகமாக இடை நிறுத்தியதால் ஏற்பட்ட நட்டத்திற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் சமர்ப்பித்திருந்த விலைப்பட்டியல்கள் அந்த நிறுவனத்தினால் உறுதிப்படுத்தப்படாததால் ரூபா. 12.35 மில்லியன் விலைப்பட்டியல் பெறுமதியினை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல்கள் தீர்க்கப்படாமைக்கான காரணத்தினைக் கண்டறிந்து உடனடியாக அந்தத் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | கூட்டுத்தாபனத்தில் நிதிக்கூற்றுகளுக்கு அமைய 2020 ஆம் ஆண்டு தொடக்கம் செயல்படுத்தப்பட்டு வரும் கிரிமண்டல மாவத்தை விவசாய அபிவிருத்தி செயற்திட்டத்தில் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கூட்டுத்தாபனத்திற்கு | ஆரம்பத்தில் நிலத்தினை பயிர் செய்கைக்கு ஏற்ற வகையில் தயாரிப்பதற்கு குறிப்பிடத்தக்களவு தொழிலாளர் தொகையினை வேலையில் | கூட்டுத்தாபனத்தினால் செயல்படுத்தப்படும் செயற்திட்டம் நட்டமடையாத வகையில் முகாமைத்துவப்படுத்த |

| | | |
|---|---|---|
| ஏற்பட்ட நட்டம் முறையே ரூபா.7.16 மில்லியன் மற்றும் ரூபா.6.81 மில்லியனாக இருந்ததுடன் செயற்திட்டத்திற்காக கூட்டுத்தாபனத்தினால் வருடாந்தம் மேற்கொள்ளப்பட்ட செலவு முறையே ரூபா.7.73 மில்லியன் மற்றும் ரூபா. 10.75 மில்லியன் ஆகும். 2020 ஆம் ஆண்டில் செலவிடப்பட்டிருந்த தொகையில் ரூபா.3.87 மில்லியன் அதாவது 50.1 சதவீதம் ஊழியக் கிரயமாக இருந்ததுடன் மீளாய்வாண்டில் மொத்த ஊழியக் கிரயம் ரூபா.10.71 மில்லியன் அதாவது 99.63 சதவீதமாக இருந்தது. இதற்கு அமைய மொத்த கிரய முகாமைத்துவப்படுத்துதல் தொடர்பில் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு இந்த செயற்திட்டத்தினை இலாபகரமானதாக பேணிச்செல்வதற்குக் கூட்டுத்தாபனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | ஈடுபடுத்துவதற்கு நேரிட்டிருந்ததனால் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கவனத்தில் கொள்ளத்தக்களவு மொத்த செலவினை ஏற்க நேரிட்டுள்ளது. தற்போது உழியக் கிரயத்தினை குறைத்து இந்த செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வேண்டும் எனவும் மற்றும் சட்ட ரீதியான நோக்கங்களுக்கு முரண்படாத வகையில் புதிய செயற்திட்டத்தினை ஆரம்பித்தல் வேண்டும் என்பது. |

## 3.2. முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1981 ஆம் ஆண்டு தொடக்கம் 2005 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியினுள் கூட்டுத்தாபனத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த காணிகளுக்கு உரிய நட்ட ஈட்டுத் தொகை செலுத்துதல் தாமதம் அடைந்த காரணத்தினால் அந்த காணிகளுக்காக மீளாய்வாண்டு இறுதியில் செலுத்தப்பட வேண்டிய நட்ட ஈட்டுத் தொகை ரூபா. 47.11 மில்லியனும் அதற்கு உரியதாக செலுத்தப்பட வேண்டிய வட்டி ரூபா. 112.63 மில்லியனுமாக இருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான வட்டி ரூபா. 3.34 மில்லியனாக இருந்தது. இந்த காணியினைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கை 14 வருடங்கள் தொடக்கம் 39 வருடங்கள் வரையான கால வீச்சினுள் இடம்பெற்று வருவதுடன் இந்த தாமதத்தின் காரணமாக குறித்த காணிகளில் அனுமதியற்ற குடியேற்றங்கள் அதிகரித்திருந்தன என்பதும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு இருப்பினும், காணி உரிமையை தீர்த்துக் கொள்வதற்கு கூட்டுத்தாபனத்தினால் உரிய | 2020 - 2021 ஆம் ஆண்டுகளில் நாட்டில் பரவியிருந்த Covid -1 9 தொற்றுநோய் நிலைமை காரணமாக கூட்டங்களுக்காக மக்களை அழைத்தல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது எனினும் 2023 மார்ச் 30 ஆம் திகதி தொடக்கம் அனைத்து தரப்பினர்களின் பங்களிப்புடன் குறித்த கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்ததுடன் மூன்று மாதத்திற்கு ஒரு தடவை இந்தக் கூட்டத்தினை அழைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | காணிகளுக்கு உரிய நட்ட ஈட்டுத் தொகை காலத்திற்கு காலம் தீர்க்கப்பட்டு நட்டஈட்டு வட்டியினை குறைத்துக் கொள்ள வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| | பிரதேச செயலாளர், விலை மதிப்பீட்டுத் திணைக்களம் மற்றும் நில அளவையியல் திணைக்களம் போன்ற நிறுவனங்களைத் தொடர்பு கொண்டு மீளாய்வாண்டினுள் எதுவித காணி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களையும் நடாத்தி இருக்கவில்லை என்பதும் வெளிப்படுத்தப்பட்டது. | | |
| (ஆ) | கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான முத்துராஜவெலவில் அமைந்துள்ள 22 ஏக்கர் 02 ரூட் 37.14 பேர்ச் கொண்ட காணித் துண்டு மற்றும் 55900 சதுர அடியினைக் கொண்ட கட்டடம் என்பன ரூபா.2,195.79 மில்லியன் குத்தகை தொகைக்கு 50 வருட நீண்ட கால குத்தகை அடிப்படையில் தனியார் நிறுவனத்திற்கு வழங்குவதற்கு 2021 ஜூன் 02 ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கான முற்பணமாக ரூபா.500 மில்லியன் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது எனினும், மீதித் தொகையான ரூபா.1,695.79 மில்லியன் தொகையினைப் பெற்றுக் கொள்வதற்கு மற்றும் முறையான குத்தகை ஒப்பந்தத்தினை ஏற்படுத்துவதற்கு 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஜூலை 02 ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் குறித்த கட்டடம் தற்காலிகமாக லிட்ரோ கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.<br><br>அதே போன்று எமது 2023 மார்ச் 09 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் குறித்த அமைச்சரவை அனுமதியின் பிரகாரம் மீதி முழுத் தொகையையும் செலுத்தி குத்தகை ஒப்பந்தத்தினை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. | முறையான குத்தகை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட வேண்டியதுடன் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் குத்தகைத் தொகையினை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் என்பது. |
| (இ) | கூட்டுத்தாபனத்தின் ஈர நில முகாமைத்துவப் பிரிவினால் 2018 ஜனவரி 05 ஆம் திகதி நிர்மாணிப்பு ஆரம்பிக்கப்பட்ட கெரவலப்பிட்டிய கழிவுப் பொருள் முகாமைத்துவ பூங்காவில் சேதன உற்பத்தி மத்திய நிலையத்தினை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் முன்மொழிபட்டிருந்த சேதன உற்பத்தி தொழிற்சாலையின் மூன்றாவது கட்டடத்தின் நிர்மாணிப்புக்காக தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டிற்கு அமைய ரூபா. 75.80 மில்லியன் செலவிடப்பட்டு பைலிங் வேலை மட்டும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீதி நிர்மாணிப்பு 2022 திசெம்பர் வரையிலும் திட்டமிடப்பட்ட வகையில் இடம்பெற்றிருக்கவில்லை. | நிதி அமைச்சினால் அரச செலவினைக் கட்டுப்படுத்துதல் எனும் தலைப்பில் வழங்கப்பட்டிருந்த 2022 ஏப்பிரல் 26 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 2022/03 கொண்ட சுற்றறிக்கைக்கு இணங்கி இரு தரப்பினரின் உடன்பாட்டின் அடிப்படையில் இந்த ஒப்பந்தத்தின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளது. | செயற்திட்டத்திற்கு தேசிய ரீதியில் உள்ள முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்களும், செயற்திட்டம் தொடர்பில் சிறந்த செலவுப் பெறுபேற்றுப் பகுப்பாய்வும் மேற்கொள்ளப்பட்டு செயற்திட்டம் ஒன்றினை நிறுத்துதல் தொடர்பில் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பது. |
| (ஈ) | 1968 இன் 15 ஆம் இலக்க இலங்கை காணி அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2 (ஆ) 1 ஆம் பிரிவிற்கு | இதுவரையில் 7 மாகாணங்களில் அமைந்துள்ள சதுப்பு, | விடயத்திற்குரிய காணிகளை இனம் கண்டு வர்த்தமானி |

அமைய நாடு முழுவதிலும் மாகாண மட்டத்தில் அமைந்துள்ள தாழ் சதுப்பு நிலம், தரிசு அல்லது சேற்று நிலங்களை அடையாளம் கண்டு அனுமதியற்ற நில மீட்பினை கட்டுப்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு செய்வதற்கு ஏற்ற வகையில் அவற்றை வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசித்தப்படுத்தலை கூட்டுத்தாபனம் செய்ய வேண்டிய போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் கூட்டுத்தாபனத்தினால் 06 மாகாணங்களில் மட்டும் அத்தகைய காணிகள் அடையாளம் காணப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது. மேலும் எல்லைகள் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருந்த காணிகளில் மேற்கொள்ளப்பட்ட அனுமதியற்ற மீட்புகள் மற்றும் அனுமதியற்ற குடியேற்றங்களைத் தவிர்ப்பதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. அதே போன்று மேலே கூறப்பட்ட சட்டத்தின் 8 (அ) ஆம் பிரிவிற்கு அமைய மீட்பிற்கு மற்றும் அபிவிருத்தி செய்வதற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த காணிகள், கூட்டுத்தாபனத்தினால் கட்டடங்களை அமைப்பதற்கு, கைத்தொழில் வணிகம் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்காக மேம்படுத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு 1995 ஆம் ஆண்டில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட முத்துராஜவெல மற்றும் முதுன் எல பிரதேசங்களில் உள்ள 800 ஏக்கர் காணியில் மீளாய்வாண்டு இறுதியில் 25 வருடங்கள் கடந்து இருந்த போதிலும் அதில் மேம்படுத்தப்பட்ட அளவு 400 ஏக்கர் அதாவது, 50 சதவீதம் மட்டுமாக இருந்தது.

தரிசு, சேற்று காணிகளைப் பிரசுரிப்பதற்கு உரிய பரிந்துரைகள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் காணி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட முடியும். வட மாகாணத்திற்கு உரிய வரைபடம் மற்றும் அட்டவணைகள் கிடைத்துள்ளதுடன் அட்டவணை மொழிபெயர்ப்பு நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் கிழக்கு மாகாண ஆளுநர் மூலம் மாவட்ட செயலாளர் / பிரதேச செயலாளர்களைத் தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முன்மொழிக்கப்பட்ட ஒலியமுல்ல நீரேற்று நிலையத்தினை நிர்மாணிக்காது குறித்த காணியை அபிவிருத்தி செய்தால் சூழ உள்ள பிரதேசங்கள் வெள்ள நிலைமைக்கு உட்படக் கூடும் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அதில் நீரேற்று நிலையம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் முதுன் எலவில் அமைந்துள்ள மீதி காணித் துண்டுகளை அபிவிருத்தி செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. முத்துராஜவெலவை அபிவிருத்தி செய்வதற்கு முன்மொழிபட்ட நில அளவில் ஒரு பகுதி கடல் மணல் சேகரித்து வைப்பதற்கு பயன்படுத்தப்படுவதுடன் ஒரு பகுதி கழிவு

மூலம் பிரசித்தப்படுத்த வேண்டியதுடன் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய காணிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் உடனடியாக செய்யப்படுதல் வேண்டும் என்பது.

| | | | |
|---|---|---|---|
| | | முகாமைத்துவ செயற்திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. மீதி காணியான 51 ஏக்கர் அளவிலான காணித்துண்டு கடல் மணலை நிரப்புவதன் மூலம் நிரப்பி அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. | |
| (உ) | 2010 ஜு 04 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 1662/17 கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் மேல் மாகாணத்தில் அமைந்துள்ள கால்வாய் மார்க்கங்களில் உள்ள சேகரிப்பு இடங்களை (Reservation) பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் மேலே கூறப்பட்ட வர்த்தமானிப் பத்திரம் வெளியிடப்பட்டு 10 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அந்த சேகரிப்பு இடங்கள் அடையாளம் காண்பதற்கு அல்லது சேகரிப்பு இடங்களில் குடியேறியுள்ள அனுமதியற்ற குடியேற்றக்காரர்களை அகற்றுவதற்கு சாதகமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த விதிகள் தொடர்பிலான திட்டங்களை அங்கீகரிக்கும் அதிகாரியான நகர அபிவிருத்தி அதிகார சபை உள்ளிட்ட அனைத்து மாகாண நிர்வாக நிறுவனங்களும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. | கூட்டுத்தாபனத்தின் அதிகாரங்கள் மற்றும் நோக்கங்களுக்கு அமைய அனுமதியற்ற நில மீட்பை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

### 3.3. தொழிற்பாட்டு செயற்றிறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடல் மணல் தொகைகளின் மீள் கட்டளை மட்டத்தினை (Re - Order Level) கணக்கீடு செய்து காலத்துக்குக் காலம் கடல் மணலினை சேகரித்து வைத்திருக்காத காரணத்தால் கடல் மணல் தொகையில் தட்டுப்பாடு ஏற்பட்டதால் 2011 ஆம் ஆண்டில் கூட்டத்தாபனத்திற்கு தேவையான கடல் மணலினை பெற்றுக் கொள்வதற்கு முத்துராஜவெல பிரதேசத்தில் இலங்கை மின்சார சபையிடம் கூட்டுத்தாபனத்தினால் மணல் நிரப்பி விற்பனை செய்யும் காணியில் இருந்து ரூபா.351.13 மில்லியன் பெறுமதியினைக் கொண்ட கடல் மணல் வெட்டி அகற்றிக் கொள்ளப்பட்டிருந்தது. 6 வருடங்களுக்கும் அதிக காலம் தொட்டு இந்த காணியினை | 2019 ஆம் ஆண்டு முதலாம் காலாண்டில் ஏற்பட்ட மணல் தட்டுப்பாட்டிற்கு தீர்வாக அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்றாவது காணியிலிருந்து மணல் அகழ்தல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன். அதிவேக வீதி செயற்திட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்த மண்ணைக் கொண்டு அது மீண்டும் நிரப்பப்பட்டுள்ளது. அதற்கு அமைய இந்தக் காணி மீண்டும் பழைய நிலைமைக்கு | மணல் அகழ்தல் மேற்கொள்ளப்பட்ட காணியில் சுற்றாடல் பாதிப்பு ஏற்படாத வகையில் உடனடியாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| | மீள நிரப்புவதற்கு, கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறு இருந்த போதிலும் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான மணலிட்டு நிரப்பப்பட்டிருந்த இருந்த காணிகளில் இருந்து முறையே ரூபா.183.68 மில்லியன் மற்றும் ரூபா. 23.19 மில்லியன் பெறுமதியான மணல் தொகை வெட்டி அகற்றப்பட்டிருந்தது. இதற்கு அமைய மீளாய்வாண்டு இறுதி வரையில் அந்த காணியை மீள நிரப்புவதற்குத் தேவையான மணலுக்காக நிதிக்கூற்றுகளில் ரூபா.557.99 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இந்த காணியினை மீண்டும் பழைய நிலைமைக்கு கொண்டு வருவதற்குக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கொண்டுவரப்பட்டு வருகின்றது. | |
| (ஆ) | குத்தகை ஒப்பந்தம் தொடர்பான மாதிரி பரீட்சிப்பிற்கு அமைய 01 வருடம் தொடக்கம் 12 வருடம் வரையான கால வீச்சினுள் செல்லுபடியாகும் குத்தகை ஒப்பந்தங்கள் முடிவடைந்து இருந்த 08 சேவை வழங்குனர்கள் இன்னமும் அந்த குத்தகை சொத்துக்களைப் பயன்படுத்தி வருகின்ற போதிலும் புதிய குத்தகை ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையிலும் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | LRDC சேவைகள் (தனியார்) கம்பனிக்கு உரிய நிலுவை குத்தகை தொகை உள்ளிட்ட ஏனைய கட்டணங்களை எதிர்காலத்தில் தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய குத்தகையாளர்களின் நிலுவை குத்தகைத் தொகை செலுத்தாமை தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு உரிய பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | குத்தகை ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதற்கு மற்றும் உடனடியாக நிலுவைக் குத்தகைத் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் என்பது. |
| (இ) | களனிய, பியகம, வத்தளை மற்றும் பேலியகொடை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஏற்படும் வெள்ளத்தினால் அந்தப் பிரதேசத்தில் வசிக்கும் சுமார் 155,000 மக்களுக்கு மற்றும் தொழிற்சாலைகளுக்கு ஏற்படும் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் சமூக பாதிப்புகளை குறைக்கும் நோக்கத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த செலவு ரூபா. 3,000 மில்லியனான முதுன் எலவை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் திறைசேரி நிதி ஏற்பாட்டில் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தை 2021 ஆம் ஆண்டு இறுதியில் பூர்த்தி செய்வதற்கு | 2018 ஆம் ஆண்டில் 02 பம்பிகள் கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அந்த பம்பிகள் வழங்குனரினால் முன்மொழிந்த நிர்மாணிப்பிற்கு அமைய நீரேற்று நிலையங்களில் சிவில் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியது என்பதால் நீரேற்று நிலையங்கள் நிர்மாண நடவடிக்கைகளை | வீடுகளை இழந்தவர்களுக்கு உடனடியாக வீடுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் நீரேற்று நிலையங்கள் இரண்டின் நிர்மாணிப்புகளை உடனடியாக பூர்த்தி செய்து எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றினை |

| | | | |
|---|---|---|---|
| | தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அத்தினத்தில் செயற்திட்டத்தின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் முறையே 61 சதவீதம் மற்றும் 62 சதவீதமாக மட்டுமே காணப்பட்டது.<br>இந்த செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்காகக் காணியினைப் பெற்றுக் கொண்ட காரணத்தால் வீடுகளை இழந்தவர்களுக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்ட 164 வீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு ரூபா.600 மில்லியன் 2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் 19 குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், இந்த செயற்திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டு இறுதியில் பூர்த்தி செய்யும் எதிர்பார்ப்பில் 02 நீரேற்று நிலையங்கள் I ஆம் கட்டம் மற்றும் II ஆம் கட்டம் எனும் ரீதியில் ஒலியமுல்ல பிரதேசத்தில் நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்ததுடன் அதில் II ஆம் கட்ட நீரேற்று நிலையத்தின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் 2018 மார்ச் 26 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அதன் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் அதன் காரணமாக 2018 ஓகஸ்ட் மாதத்தில் ரூபா.83.40 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 5M³/S நீர் பம்பிகள் இரண்டும் செயலற்று காணப்பட்டது. | ஆரம்பிப்பதற்கு முன்னர் பம்பிகளைக் கொள்வனவு செய்யும் ஒப்பந்தம் குறித்த வழங்குனருக்கு வழங்கப்பட வேண்டி இருந்தது. ஆரம்ப செயல்பாட்டு திட்டத்திற்கு அமைய ஆரம்ப சந்தர்ப்பத்தில் நடவடிக்கைகள் இடம் பெற்ற போதிலும் பின்னர் செயல்திட்டத்திற்காக கோரப்பட்டிருந்த வகையில் வருடாந்தம் ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகள் வழங்கப்படவில்லை என்பதால் பெற்றுக் கொடுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டிற்கு அமைய செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.<br>அதனால் இது வரையிலும் நீரேற்று நிலையங்களின் நிர்மாண நடவடிக்கைகளைத் திட்டமிட்ட வகையில் பூர்த்தி செய்வதற்கு முடியாது இருந்தது.<br>தற்போது சிவில் வேலைகள் இறுதி கட்டத்தில் காணப்படுகின்றன. அதன் பின்னர் பம்பியை நிறுவி செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |
| (ஈ) | கூட்டுத்தாபனத்தினால் 1996 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் 05 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உரியதான 9 நீர் தேங்கும் பிரதேசங்களில் 400 ஹெக்டயரில் மேற்கொள்ளப்பட்டிருந்த அனுமதியற்ற 1,104 நிர்மாணிப்புகள் மற்றும் நில மீட்புகள் என்பன இனம் காணப்பட்டிருந்தன. எனினும் அந்த இனம் காணப்பட்ட அனுமதியற்ற நிர்மாணிப்புகளை அகற்றுவதற்கு மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நகர சபையினால் அனுமதியற்ற நிர்மாணிப்புகளுக்காக வரி இலக்கம் வழங்கப்படுதல் மற்றும் திட்டங்களுக்கு அனுமதிகளை வழங்குதல் மற்றும் மின்சார சபை மற்றும் நீர் வழங்கல் சபையினால் அந்த அனுமதியற்ற நிர்மாணிப்புகளுக்காக மின்சாரம் மற்றும் நீர் வழங்கலைப் பெற்றுக் | உரிய ஏனைய அரச மற்றும் மாகாண நிர்வாக நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து சுற்றுச்சூழல் தாக்கங்களைக் கொண்ட அனுமதியற்ற நிர்மாணிப்புகளை அகற்றுவதற்குக் கூட்டுத்தாபனத்திற்கு உள்ள |

| | | | |
|---|---|---|---|
| | | கொடுத்திருந்த காரணத்தால் இந்த அனுமதியற்ற செயல்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. | அதிகாரங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் என்பது. |
| (உ) | மாதின்னாகொடை வீட்டுச் செயற்திட்டத்திற்காக கையகப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட காணிக்காக ரூபா.112 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் நுழைவு வீதி ஒன்றை 2018 ஆம் ஆண்டளவில் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருந்த போதிலும் 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையிலும் காணியினைக் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த கூட்டுத்தாபனத்தினால் முன்மொழியப்பட்டிருந்து பணியினை இனம் கண்டு அதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு அந்த வீதியினை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனோடு இணைந்து அதன் இறுதி முனையை இணைந்த வீதியுடன் இணைப்பதற்கு அதன் அண்மையில் அமைந்துள்ள அனுமதியற்ற நிர்மாணிப்புகளை அகற்றுவதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. அதற்கமைய, அந்த அனுமதியற்ற நிர்மாணிப்புகளை அகற்றுதல் காணப்படும் சுற்றாடல் நிலைமையில் எதிர்பாராத வகையில் மேற்கொள்ளுவதற்கு முடியாது உள்ளது. | காணியினைக் கையகப்படுத்தும் செயல்பாட்டினை உடனடியாக நிறைவு செய்து செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பது. |

### 3.4. சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தின் குத்தகைக் காணியினை அடகு வைத்தல் கொள்கைக்கு அமைய, குத்தகை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 05 வருடங்கள் கடந்ததன் பின்னர் அடகு வைப்பதற்காகக் கவனத்தில் கொள்ளக் கூடியதாக உள்ளதுடன் காணியினைப் பிணையாக வைப்பதற்கு முன்னர் கூட்டுத்தாபனத்தின் தலைவரின் எழுத்து மூலமாக விருப்பத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். எவ்வாறு இருப்பினும் அந்த நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்த போதிலும் | குத்தகைக்காரர்களினால் முழுமையான குத்தகைப் பணம் செலுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள நோக்கத்தினை மாற்றாது ஆரம்ப குத்தகை வழங்கலுக்காக கைச்சாத்திடப்பட்ட குத்தகை ஒப்பந்தம், துணைக் குத்தகை வழங்கலுக்காக அல்லது குத்தகை உரிமையினை அடகு | கூட்டுத்தாபனத்தில் காணப்படும் சட்ட விதிகள் பின்பற்றப்பட வேண்டும் என்பதும் மற்றும் காணியினைக் குத்தகைக்கு வழங்கியுள்ள நோக்கத்திற்காகப் பயன்படுத்துவதாக உறுதிப்பாட்டினை பெற்றுக் கொள்ளுதல். |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தாபனத்தினால் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த முத்துராஜவெலவில் அமைந்துள்ள 09 ஏக்கர் 36.57 பேர்ச் கொண்ட 02 காணிகளும் மற்றும் 04 ஏக்கர் 02 ரூட் 11 பேர்ச் கொண்ட காணியும் தனியார் வங்கியிடம் முறையே ரூபா. 4.5 மில்லியனுக்கு மற்றும் ரூபா. 600 மில்லியனுக்கு அடகு வைப்பதற்காக குத்தகையாளர்களிடம் மீளாய்வாண்டில் பணிப்பாளர் சபை அனுமதியினை வழங்கி இருந்தது. இது கூட்டுத்தாபனத்தில் காணப்படும் கொள்கைகளை மீறியது என்பது அவதானிக்கப்பட்டது. | வைப்பதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, இந்த இரு சந்தர்ப்பங்களிலும் முழுமையான குத்தகைப் பணம் ஒரே தடவையில் செலுத்தப்பட்டுள்ளதுடன், குத்தகை உரிமையை அடகு வைப்பதற்குகே கூட்டுதாதாபனப் பணிப்பாளர் சபை அனுமதி வழங்கியுள்ளது. | |
| (ஆ) | கம்பஹா ஈர நில பூங்காவின் திட்டமிடல் மற்றும் நிர்மாணித்தல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சினால் ரூபா.24.45 மில்லியன் இயக்க முற்பணத்தினை கூட்டுத்தாபனத்திற்கு வழங்கி இருந்ததுடன் 2019 நவம்பர் மாதத்தில் அந்த செயற்திட்ட நடவடிக்கைகளில் இருந்து ஒரு பகுதி மட்டும் பூர்த்தி செய்யப்பட்டு மீதி நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தன. மீளாய்வாண்டினுள் எதுவிதமான நிர்மாண நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்காத போதிலும் மேலே கூறப்பட்ட வேலை முன்னைய முற்பணக் (இயக்கம் முற்பணம்) கணக்கிலிருந்து ரூபா.5.05 மில்லியன் குறைக்கப்பட்டு இருந்தமை சிக்கலுக்குரிய விடயமாகும். | கணக்கு வைக்கும் போது ஏற்பட்ட நட்டமாக இனம் காணப்பட்டுள்ளது. இது 2022 ஆம் ஆண்டில் திருத்தப்படும். | கொள்முதல் பணி கோவையின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய மற்றும் கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நியமங்களுக்கு அமைய ஒப்பந்தமன கணக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பது. |

## 3.5. விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெல்லன்வில பௌத்த விகாரை அருகில் காணப்படும் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 06 விற்பனைக் குடில்கள் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையில் குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது மூடப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டுக்காக ரூபா.7.2 மில்லியன் | இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்த 06 விற்பனைக் குடில்களுக்குப் பல்வேறு சந்தர்ப்பங்களில் விலை மனு கோரல் (Calling Bids) மற்றும் முன்மொழிவுகள் (RFP) கோரப்பட்டிருந்த போதிலும் | வெளிப்படைத் தன்மையுடன் கூடியதாக விற்பனைக் குடில்கள் தேவைப்படும் கொள்வனவாளர்களிடம் வழங்கி வருமானம் ஈட்டுவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| மற்றும் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா.108.45 மில்லியன் ரீதியில் கூட்டுத்தாபனத்தினால் ஈட்டக் கூடியதாக இருந்த வருமானம் ரூபா.115.65 மில்லியன் இழக்கப்பட்டிருந்தது. | அதற்கு சாதகமான மற்றும் நிதி ரீதியான சாத்தியக்கூறுகளுடன் கூடிய பெறுபேறுகள் கிடைக்கவில்லை. | என்பது. |

## 3.6. செயற்திட்டம் அல்லது மூலதன பணிகளிலான தாமதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா.41.44 மில்லியனான கெரவலப்பிட்டிய பிரதேசத்தில் கழிவுநீர் கால்வாய்களை மேம்படுத்தும் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா.18.02 மில்லியன் இயக்க முற்பணத் தொகை 2018 பெப்ரவரி 05 ஆம் திகதி வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. 2018 மே 28 ஆம் திகதி வரையில் ரூபா.15.60 மில்லியன் பெறுமதியான விலைப்பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் தொழில் ஆரம்பிப்பு முற்பணத் தொகையாக ரூபா.6.22 மில்லியன் குறைக்கப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்துவதற்காக விலைப்பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. செயற்திட்டத்தின் மீதி நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட வகையில் ஒப்பந்த வழங்குனரான வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் வீடுகள் அகற்றப்பட்டு வழங்காத காரணத்தால் கூட்டுத்தாபனத்திற்கு மேலே கூறப்பட்ட செயற்திட்டத்தினை இடை நடுவில் கைவிடுவதற்கு நேரிட்டு இருந்தது. இதனால் கழிவு நீர் வாய்க்கால்கள் தடை செய்யப்பட்டு இருந்ததுடன் இதனால் மழை நாட்களில் பிரதேசத்தில் வெள்ள நிலைமை ஏற்படுவதற்கு காரணமாகக் கூடும் என்பது அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கவில்லை. | கூட்டுத்தாபனம் பொறுப்பேற்றிருந்த நிர்மாண நடவடிக்கைகளை இடை நடுவில் நிறுத்தும் போது பொது மக்களுக்கு ஏற்படும் தாக்கத்தினைக் குறைக்கும் வகையில் மற்றும் வளங்களின் விரயத்தினை குறைக்கும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது. |
| (ஆ) | உலக வங்கியின் உதவியின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா.8,700 மில்லியனான கொலன்னாவை மழைநீர் கழிவுநீர் மற்றும் சுற்றாடலை மேம்படுத்தும் செயற்திட்டம் பின்னர் அமைச்சரவையின் தீர்மானத்திற்கு | செயற்திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளுக்கு நேரொத்து திறைசேரியிலிருந்து வழங்கப்பட்டிருந்த நிதி | வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களின் நிர்மாண நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பித்து பூர்த்தி செய்வதன் மூலம் குறித்த |

| | | |
|---|---|---|
| அமைய திறைசேரி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் செயல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. செயற்திட்டம் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 05 வருடங்களில் நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டு இறுதியில் ரூபா.482.57 மில்லியன் செலவு செய்யப்பட்டு 4.1 கிலோ மீட்டரைக் கொண்ட பஸ்ஸன்ன கால்வாயுடன் இணைக்கும் 450 மீட்டரை கொண்ட கிளை கால்வாயினை மேம்படுத்தும் நடவடிக்கை மட்டும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. திட்டமிடப்பட்ட வகையில் திறைசேரி நிதி ஏற்பாடு கிடைத்திருக்காததுடன் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் இந்த செயற்திட்டத்தின் பௌதிக முன்னேற்றம் 6 சதவீதம் அளவான மிகவும் குறைந்த வீதத்தில் காணப்பட்டது. | ஏற்பாடு குறைவாக இருந்ததனால் அதற்கமைய செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டதால் அதற்குரிய பௌதீக முன்னேற்றம் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. | பெறுபேற்றினை பொதுமக்களுக்கு வழங்க முடியும் என்பது. |

## 3.7. ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தினால் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வேலை ஆரம்பிக்கப்பட்ட மற்றும் மீளாய்வாண்டு இறுதியில் பௌதிக முன்னேற்றம் 67 சதவீதத்திற்கும் 97 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்ட 5 மதியுரை சேவை ஒப்பந்தங்களுக்கு உரியதான சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைப் பட்டியல்களில் பெறுமதி ரூபா. 17.97 மில்லியனுக்காக எதுவிதமான அறவீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சேவை வழங்குனர் நிறுவனங்களுடன் ஒப்பந்த உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை இதற்கான முக்கியமான காரணமாக இருந்ததுடன் சேவை வழங்குனர்களினால் விலைப் பட்டியல்களுக்கான கொடுப்பனவு செய்யப்படாத போதிலும் மதியுரை சேவை பணிகளை நிறுத்தாது நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் 2017 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ரூபா.6.03 மில்லியன் செலவு செய்யப்பட்டு கூட்டுத்தாபனத்தினால் சேவை வழங்குநர் நிறுவனத்துடன் உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்படாது செயல்படுத்தப்பட்ட 2 | அத்துருகிரிய நடைபாதை நிர்மாண செயற்திட்டத்தினை நிதி ஏற்பாடு கிடைக்காததனால் பூர்த்தி செய்வதற்கு முடியாது இருந்தது.<br>முல்லைதீவு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் பேருந்து தரிப்பிடத்திற்காக குறித்த கழிவு நீர் திட்டத்தினை தயாரிக்கும் செயற்திட்டம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கோரிக்கையின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தினைத் துரிதப்படுத்தும் தேவைப்பாட்டின் அடிப்படையில் அதற்குத் தேவையான மதியுரை சேவை (கழிவு நீர் திட்டம்) வழங்கப்பட்டிருந்தது. மாகெவிட்ட நெலும்வில | மதியுரை சேவை ஒப்பந்தங்களை மேற்கொள்ளுவதற்கு முன்னர் உடன்படிக்கைகளை மேற்கொள்ளுதல் அவசியமானது மற்றும் பொதுவான முறைமையாகும் என்பது. |

| | | |
|---|---|---|
| ஒப்பந்த விலைப் பட்டியல்கள் 2023 ஜனவரி மாதம் வரையில் குறித்த நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த விலைப்பட்டியல்கள் உறுதிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | உடற்பயிற்சி நடைபாதை II ஆம் கட்டத்துக்காக அமைச்சரவை அனுமதி கிடைத்திருக்காததால் அதன் நிர்மாணத்திற்காக உடன்படிக்கை ஏற்படுத்தப்படவில்லை. தலதா மாளிகை உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்துடன் தொடர்புடைய மதியுரை சேவைகளுக்கு உரிய உடன்படிக்கையை மேற்கொள்வதற்காக தயாரிக்கப்பட்ட உடன்படிக்கை தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நிரல் அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற வளாகத்தின் பக்கச் சுவரினை சீர் செய்தல் பாராளுமன்றத்தின் கோரிக்கையாக இருந்ததுடன், இது அத்தியாவசிய சேவையாக உள்ளதால் உடனடியாக நிறைவேற்றியதுடன் அதற்கான மதியுரை சேவைக் கட்டணத்தினை வழங்குமாறு கடிதம் மூலம் தெரிவித்து அனுப்புதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |

## 3.8. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1,800 ஆக இருந்ததுடன் அத்தினத்தில் உண்மையான பதவியணி | மேலதிக பதவியணி சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது என்பதை எடுத்துக் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் அடிப்படையில் வெற்றிடங்களை |

| | | |
|---|---|---|
| 1,331 ஆகும். அதே போன்று அத்தினத்தில் கூட்டுத்தாபனத்தின் பதவியணி வெற்றிடங்கள் மற்றும் மிகைகள் என்பன முறையே 497 மற்றும் 28 ஆக இருந்ததுடன் ஆரம்ப, இரண்டாம் நிலை மற்றும் பதவி நிலைத் தரங்களின் வெற்றிடங்கள் முறையே 304, 161 மற்றும் 32 ஆக இருந்ததுடன மிகை முறையே 22, 05 மற்றும் ஒன்று ஆகும். | காட்டுவதற்கு காரணம் கூட்டுத்தாபன சேவையில் இணைக்கப்பட்டு பயிற்சியினை பெற்று வருபவர்களுள் இலக்கம் 25/2014 கொண்டதும் 2014 நவம்பர் 12 ஆம் திகதி இடப்பட்ட அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் 180 நாட்கள் சேவைக் காலத்தினை பூர்த்தி செய்திருந்த நபர்கள் கூட்டுத்தாபனத்தின் நிலையான பதவிகளில் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்த காரணத்தால் ஆகும். | நிரப்புதல் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை விலகி சேவையில் ஈடுபடுத்தப்படும் உத்தியோகத்தர்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பது. |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1. நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜுன் 02 ஆம் திகதி இடப்பட்ட பொது வியாபார சுற்றறிக்கை இலக்கம் பீஈடி/12 இன் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் 2021 ஆம் ஆண்டுக்கு உரிய இறுதி நிதிக்கூற்றுக்கள் 2022 பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 10 மாதங்களை விட அதிக தாமதமாகி அதாவது 2022 திசெம்பர் 20 ஆம் திகதி நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | தங்களது அவதானிப்புடன் இணங்குகின்றேன். | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு அமைய நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் வேண்டும் என்பது. |

**4.2. ஆண்டறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜூன் 02 ஆம் திகதி இடப்பட்ட பொது வியாபார சுற்றறிக்கை இலக்கம் பீஈடி/12 இன் 6.5.3 ஆம் பந்தியில் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தினால் 2020 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சபைக்களிக்கப்பட்டு இருக்கவில்லை. | தங்களது அவதானிப்புடன் இணங்குகின்றேன். | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு அமைய ஆண்டறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும் என்பது. |